ஆய்வை நடத்தி அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறது. அதிலே பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுகின்ற நிலைமை இல்லை. அதை அரசு செய்வதற்கு இயலாது என்பதை முன்பே தெளிவாகத் தெரிவித்து இருக்கிறோம். அதற்கு பதிலாக உயிர்வேலி அமைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம். அதைப்போலவே, 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த 2 இலட்சம் ரூபாய் தருவதற்கான வாய்ப்பு, 50 விழுக்காடு தொகையை பொது மக்கள் ஏற்பாடு செய்து செலுத்தினால்தான் தர முடியும் என்று அரசு விதி இருக்கிறது. ஆகவே, நீங்கள் 50 விழுக்காடு தொகையை செலுத்த முன்வந்தால், 50 விழுக்காடு தொகையை அரசு தருவதற்கு இன்றைக்கும் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அங்கே செய்வதில் தாமதம் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசு அல்லது கல்வித் துறை எந்தவிதமான தயக்கத்தையும் காட்டவில்லை. எந்தெந்த பள்ளிகள் 50 விழுக்காடு தொகையை செலுத்த முன்வருகிறதோ, தகுதி அடிப்படையிலே நிதியை ஒதுக்குவதற்காக 150 லட்சம் ரூபாயை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் செய்ய வேண்டிய பணியை அங்கே செய்யுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

18—

மேட்லி ரோடு ரயில்வே பாலம் கட்டுதல்

*10742—**திரு. எஸ். ஜெயக்குமார்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகராய நகர் தொகுதி, மேட்லி ரோடு ரயில்வே பாலம் அரசு கட்டுமான கழகத்தின் மூலம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 நவம்பர் 3]

சென்னை தியாகராயர் தொகுதி, மேட்லி ரோடு இரயில்வே சுரங்கப் பாதை தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் மூலம் கட்டிமுடிக்கப்பட்டு தற்போது வாகனம் மற்றும் பாதசாரிகள் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வாகனங்கள் விடப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் சொன்னார். ஏற்றுக் கொள்ளுகிறேன். அதே சமயத்தில் பத்து விழுக்காடு வேலைகள் அங்கே பாக்கி நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதைச் சீக்கிரம் முடித்து அந்தப் பாலத்திலே வாகனங்கள் செல்ல மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை தியாகராயர் தொகுதி மேட்லி சாலை இரயில்வே சுரங்கப்பாதை கட்டும் பணியின் மதிப்பீட்டுத் தொகை சுமார் *2* கோடியே *40* இலட்சம் ரூபாய் அளவிலே இன்றைக்கு தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த *1994*-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் வாகனம் மற்றும் பாதசாரிகள் போக்குவரத்திற்காக அது ஏற்கெனவே திறந்துவிடப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது சுரங்கப் பாதையிலே மழைநீர்வடிகால் பணியும், சுரங்கப்பாதையில் இதர பணிகளும், வர்ணம் பூசுகின்ற பணியும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இன்னும் *30* விழுக்காடு பணிகள் முடிவடைய இருக்கின்றன. அனைத்துப் பணிகளும் முடிவடைந்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வத்தினுடைய ஆட்சியிலே என்னுடைய தொகுதியிலேயுள்ள *972* ரோடுகளும் போடப்பட்டு *4* ஆண்டுகளிலே அந்தத் தொகுதியை ஒரு புதுப் பொலிவு உள்ள தொகுதியாக மாற்றியதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோலவே கடந்த *22* ஆண்டுகால ஆட்சியிலே *70* சோடியம் விளக்குகள்தான் போடப்பட்டிருந்தன. இப்பொழுது *4* ஆண்டுக்கால ஆட்சியிலே *975* சோடியம் விளக்குகளைப் போட்டு அங்கே பகலைப்போல மாற்றிய இதய தெய்வத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும் இந்தப் பாலத்திற்கு அந்தப் பக்கத்திலுள்ள மேற்கு மாம்பலம் ரோடு மிகவும் பழுதடைந்துள்ளது.

அந்த ரோட்டை மாற்றி உடனடியாக நல்ல ரோடு அமைத்து வாகனங்கள் செல்ல மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடி நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஈடு இணையற்ற முதல்வர் எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் இன்றைக்குச் சென்னை மாநகரத்திலே "எழில்மிகு சென்னை 2000" திட்டத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய அத்துணை பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய மேற்கு மாம்பலத்தினுடைய அந்தச் சாலையும் செப்பனிடப்பட்டு கூடிய விரைவிலே ஜனவரி மாதத்திற்குள்ளாக அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு அனைத்துச் சாலைப் போக்குவரத்தும் அங்கே மாமூலமாக விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

19—

இராசிபுரம் நகரில் சாலை செப்பனிடல்

*33210—**திருமதி க. பழனியம்மாள்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், இராசிபுரம் நகரில் தெருச்சாலைகளைச் செப்பனிட்டு, சாக்கடை வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், இராசிபுரம் நகரில் சாக்கடை மற்றும் தெருச்சாலை வசதிகள் மேற்கொள்ள நகர்புற வளர்ச்சி மேம்பாட்டு நிதியின் கீழ் முறையே ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.22.65 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.